Registered as a News Paper in Sri Lanka. பக்கங்கள் 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM [Peoples Daily] மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஆனி மீ 23 ஆம் உ சனிக்கிழமை (07 - 07 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஜ் 13 ஓசை 139

## ஒரே நாளில் 39 படகுகளில் 2300 அகதிகள் இராமேஸ்வரம் சேர்ந்தனர்

(இராமேஸ்வரம்)

இலங்கையிலிருந்து இரண்டாயிரத்து முந்நூற்றுக்கு மேற்பட்ட அகதிகள் முப்பத்தொன்பது படகுகளில் ஒரே நாளில் இராமேஸ்வரம் போய்ச் சேர்ந்துள்ளனர். நேற்று முன் தினம் இரவு இராமேஸ்வரம் வந்த இந்த அகதிகள் வவுனியா, முல்லைத்தீவு, திருக்கோணமலை, பேசாலை ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களாவர் இவர்களுடன் மண்டபம் முகாமில் கடந்த சில தினங்களுக்குள் அகதிகளின் எண்ணிக்கை ஏழாயிரத்துக்குமதிகமாக அதிகரித்துள்ளது. வடக்கிலும், கிழக்கிலும் சிறிலங்கா இராணுவம் நடத்தும் கண்மூடித்தனமான விமானக் குண்டு வீச்சும், உணவுத் தட்டுப்பாடுமே அகதிகள் தொகை அதிகரித்து வருவதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

# புலிகளின் கட்டுப்பாட்டிலேயே வடக்கு இருக்கிறது- அரசாங்கம் ஒப்புக்கொள்கிறது

## கிழக்கில் புனானை, அம்பாறை; திருமலைப் பகுதியில் மோதல்!

(கொழும்பு)

வடக்கு மாகாணம் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் தான் இன்னமும் இருக்கிறதென்பதை சிறிலங்கா பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா ஒப்புக்கொண்டிருக்கிறார்.

வடக்கில் காங்கேசன்துறை துறைமுகமும், பலாலி விமான நிலையமும் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிறதென்றும் அமைச்சர் ரஞ்சன் சொன்னார். கிழக்கு மாகாணம் முழுவதும் அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் அங்கு சகஜநிலை திரும்பி வருவதாகவும் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்தார்.

## சிங் அரசுமீது ராஜீவ் குற்றச்சாட்டு

### தமிழர் பாதுகாப்பில் அசட்டையாம்

(டில்லி)

இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க தேசிய முன்னணி அரசு தவறிவிட்டதென இந்திரா காங்கிரஸ் கட்சித்தலைவர் ராஜீவ் காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இலங்கையில் வடக்கு-கிழக்கில் வாழும் தமிழரின் பாதுகாப்பிற்கு உத்தரவாதப் வழங்கும்படி இலங்கை அரசாங்கத்தைத் தாம் பிரதமமந்திரியாக இருந்த காலத்தில் கோரியதாகவும், இதனைத் தேசிய முன்னணி அரசு தற்பொழுது அசட்டை செய்துவிட்டதாகவும் ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக இந்திய மத்திய அரசு தனது கொள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய இலங்கையைக்காக்க ஈ.பி.ஆர்.எல்.எப் ஆதரவு

(கொழும்பு)

ஐக்கிய இலங்கையை கட்டி எழுப்புவதற்கு ஈ.பி.ஆர்.எல் எப் இயக்கம் முழு ஆதரவு வழங்கும் என்று ஈ.பி.ஆர். எல்.எப் எம்.பியான எஸ். பிரேமச்சந்திரன் பாராளுமன்றத்தில் நேற்று கூறினார்.

மாகாணசபை திருத்தச் சட்ட மூலத்தினால் தமிழ் பேசும் மக்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களை பறித்தெடுக்க வழிவகுக்கிறது என்றும் சொன்னார்.

தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றி வைப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இறந்த காயமடைந்தோர் பெயர் விபரம் சேகரிப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக்காலத்தில் இடம் பெற்று வரும் வன்செயல்களினால் இறந்த, காயமடைந்த பொதுமக்களின் சகல விபரங்கள் யாழ். செயலக ஊழியர்களால் சேகரிக்கப்பட்டு வருகின்றது.

இறப்புப் பதிவுகள் எதுவும் இல்லாத காரணத்தினாலும், வைத்தியசாலைகள், பொலிஸ் நிலையங்கள் ஆகியன இயங்காத காரணத்தினாலும் இறந்தவர்களினதும், காயப்பட்டோர்களினதும் சரியான விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் மீண்டும் மோதல் 3 இராணுவம் பலி

அம்பாறைக் காட்டுப் பகுதியில் இராணுவத்தினரை எதிர்கொண்டு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் சிறிலங்கா சிப்பாய்கள் மூவர் கொல்லப்பட்டனர்.

அம்பாறை மாவட்ட காட்டு பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரை எதிர்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ரீ-81 ரக துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

### வீரமரணம்

இத்தாக்குதலின்போது அம்பாறை மண்ணில் சிறிலங்கா இராணுவத்துடன் நீண்ட நேரமாக முன்நின்று போராடிய சஜமோகன் வீரமரணமடைந்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றைய நெருக்கடிபற்றி மாணவர்களுடன் உரையாடல்

### த.வி.பு. மாணவர் இயக்கம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இன்று நாட்டில் ஏற்பட்டு உள்ள நெருக்கடி நிலைமைகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாட தமிழீழவிடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் ஒழுங்குகளைச் செய்துள்ளது.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கூட்டம் கொக்குவில் இந்துக்கல்லூரியில் நாளை காலை 9 30மணிக்கும் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவின்கூட்டம் இன்று மாலை 4.00மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியிலும், சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கூட்டம் நாளைமாலை 4.00 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரியிலும் நடைபெறும்.

அனைத்து மாணவர்களையும் சமுகமளிக்கும்படி விடுதலைப் புலிகளின் மாணவர் இயக்கம் கேட்டுள்ளது.

## மாணவிகள் பதுங்கு குழி அமைப்பு

உரும்பிராய் பிரதேச யாழ்-பல்கலைக்கழக மாணவிகள் இணைந்து பொதுமக்கள்அதிகம்நடமாடும்பகுதிகளில்பதுங்கு குழிகளை அமைக்கும்

(4ஆம் பக்கம்பார்க்க)

## இலங்கைதமிழர்பிரச்சினையை அரசியலாக்க வேண்டாம்

## வவுனியா அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் திண்டாட்டம்

## பெயர் விபரம் சேகரிப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக்காலத்தில் இடம்பெற்று வரும் வன்செயல்களினால் இறந்த, காயமடைந்த பொதுமக்களின் சகல விபரங்கள் யாழ். செயலக ஊழியர்களால் சேகரிக்கப்பட்டு வருகின்றது.

இறப்புப் பதிவுகள் எதுவும் இல்லாத காரணத்தினாலும், வைத்தியசாலைகள், பொலிஸ் நிலையங்கள் ஆகியன இயங்காத காரணத்தினாலும் இறந்தவர்களினதும், காயப்பட்டோர்களினதும் சரியான விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

நிலையமும் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிறதென்றும் அமைச்சர் ரஞ்சன் சொன்னார். கிழக்கு மாகாணம் முழுவதும் அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் அங்கு சகஜநிலை திரும்பி வருவதாகவும் ரஞ்சன் விஜெரத்தினா தெரிவித்தார்.

## மோதல் 3 இராணுவம் பலி

அம்பாறைக் காட்டுப் பகுதியில் இராணுவத்தினரை எதிர்கொண்டு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் சிறிலங்கா சிப்பாய்கள் மூவர் கொல்லப்பட்டனர்.

அம்பாறை மாவட்ட காட்டு பகுதியில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினரை எதிர்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலில் மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ரீ-81 ரக துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

### வீரமரணம்

இத்தாக்குதலின்போது அம்பாறை மண்ணில் சிறிலங்கா இராணுவத்துடன் நீண்ட நேரமாக முன்நின்று போராடிய சஜமோகன் வீரமரணமடைந்தார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

### ... அமைப்பு

உரும்பிராய் பிரதேச யாழ்-பல்கலைக்கழக மாணவிகள் இணைந்து பொதுமக்கள் அதிகம் நடமாடும் பகுதிகளில் பதுங்கு குழிகளை அமைக்கும்

(4ஆம் பக்கம் பார்க்க)

அத்தியார் இந்துக்கல்லூரியிலும், சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கூட்டம் நாளைமாலை 4.00 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரியிலும் நடைபெறும்.

அனைத்து மாணவர்களையும் சமுகமளிக்கும்படி விடுதலைப் புலிகளின் மாணவர் இயக்கம் கேட்டுள்ளது.

# இலங்கைதமிழர்பிரச்சினையை அரசியலாக்க வேண்டாம்

## மதுரைக் கூட்டத்தில் கருணாநிதி

(மதுரை)

இலங்கையில் தமிழர்கள் அழிக்கப்படுகிறார்கள். அவர்களைப் பாதுகாக்ககட்சிவேறுபாடின்றி சகல தமிழக மக்களும் ஒன்றுபட வேண்டும் என தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார். தஞ்சைப்பல்கலைக் கழக தலைவருக்கு மதுரையில் நடந்த பாராட்டுவிழாவில் பேசிய கருணாநிதிஇவ்வேண்டுகோளை விடுத்தார்

மேலும் அவர் பேசுகையில் இலங்கைத்தமிழர் பிரச்சினையை அரசியல் ஆக்கக் கூடாது என்றும், இப்பிரச்சினையை மனிதாபிமான ரீதியில் அணுக வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இலங்கையில் தமிழர்கள் தினமும் செத்துக் கொண்டிரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## குடியிருப்புக்கள் மீது ஹெலிதாக்கு; மக்கள் காயம்

(மண்முனைத்துறை)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனைத் துறையில் ஹெலிகொப்டர் பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி நேற்று முன்தினம் அகோரமான தாக்குதலை மேற்கொண்டது.

ஹெலிகொப்டரில் இருந்து எறி குண்டுகள் வீசப்பட்டதுடன் துப்பாக்கி கொண்டும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## திராவிடர் கழகம் கோரிக்கை

(சென்னை)

இலங்கையில் நடைபெறும் இனப்படுகொலையை நிறுத்தி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண மத்திய அரசு முன்வர வே[ண்]டுமென்று நேற்று சென்னையில் கூடிய திராவிடர் கழகச்செயற்குழு கோரிக்கை விடுத்தது.

## மாகாணசபை திருத்தசட்டம் நிறைவேற்றம்

(கொழும்பு)

இரண்டு மாகாணசபை திருத்தச்சட்ட மூலங்களும், ஒரு மாகாணசபை தேர்தல் திருத்தச்சட்ட மூலமும் நேற்று சிறிலங்கா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஈ. பி. ஆர். எல். எவ். உறுப்பினர்கள் தனிஈழப்பிரகடனம் செய்ததைத் தொடர்ந்துமுன்னர்எடுத்துக்கொண்ட சத்தியப் பிரமானத்திற்கு இணங்க பதவி இழக்கின்றார்

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரை நோக்கி ஷெல் தாக்குதல்

(விசேட நிருபர்)

கடந்த சில நாட்களாக நிறுத்தப்பட்டிருந்த பலாலி முகாம் ஆட்லறிச் ஷெல் தாக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியா அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் திண்டாட்டம்

## அரச அதிபர் குழு வவுனியா செல்ல முயற்சி

(யாழ்ப்பாணம்)

வவுனியாக் கச்சேரி ஊழியர் தவிர்ந்த ஏனைய 21 திணைக்களங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கு ஜூன் மாதத்துக்கான சம்பளக் கொடுப்பனவை வழங்குவதற்கு ரூபா 23 லட்சம் தேவைப்படுகிறதாம். இதேவேளை வவுனியாக் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த 25 ஊழியர்களுக்கும் 500 ஆசிரியர்களுக்கும் சம்பளக் கொடுப்பனவை வழக்குவதற்குத் தேவைப்படும் பணம் ரூபா 10 இலட்சம் மேற்படி நிதியை யாழ். அரசாங்க அதிபரிடமிருந்து பெற்று சம்பளக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வதென நேற்றுக் காலை நல்லூர் இந்து வித்தியாலயத்தில் வவுனியா அரசாங்க அதிபர் திரு. பத்மநாதன் தலைமையில் நடந்த அனைத்து வவுனியா அரசாங்க ஊழியர்கள் அதிகாரிகள் கூட்டத்தில் வவுனியா அரசாங்க அதிபரால் முடிவெடுக்கப்பட்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பரிசோதித்து இரத்தம் தானம் செய்ய தயாராக இருக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வட பகுதியில் சனசமூக நிலையப் பிரிவுகளைச்சேர்ந்த 18 க்கும் 50 வயதுக்கும் உட்பட்டவர்களின் இரத்தத்தை பரிசோதித்து, இரத்தம் எந்தப்பிரிவைச்சேர்ந்தது என்ற பட்டியலைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளர் திரு. டிவகலாலா சனசமூகநிலை (4 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளுக்கு உடுபிடவை

(கொழும்புத்துறை)

வெளி மாவட்டத்தில் இருந்து கொழும்புத்துறைப் பகுதிக்கு அகதிகளாக வந்து சேர்ந்துள்ள மக்களுக்கு உதவும் நன்நோக்குடன் கொழும்புத்துறை கிழக்குப் பகுதியில் உள்ள பெண்கள், உடுபுடவைகளை வீடுகள் தோறும் சென்று சேகரித்து வருகின்றனர்.

பெரும்பாலான மக்கள் அகதிகளுக்கு இந்த உதவியை முன்வந்து செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (24)

## இணக்க மன்றுகள்

அரியாலை பிரதேசத்திலுள்ள அரியாலை மேற்கு மத்தி, கிழக்கு, கொழும்புத்துறை பாஷையூர் சுண்டுக்குளி பிரிவுகளுக்கான இணக்க மன்றுகள் வருகின்ற ஞாயிற்றுக் கிழமை (8-7-90) ஆரம்பமாக உள்ளது இப்பகுதிகளிலுள்ள மக்கள் பிரச்சினைகளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் அரியாலை பிரதேச காரியத்தில் தாக்கல் செய்யுமாறு வேண்டப்படுகின்றார்கள். (11)

# தமிழ்பேசும் மக்களை அழித்து போராட்டத்தை ஒடுக்க முயற்சி

## அரசுமீது பல். மாணவர்கள் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

தமிழ் பேசும் மக்கள் திட்டமிட்டு அழிக்கப்படுவதுடன், பட்டினிச் சாவையும் எதிர்நோக்குமாறு சிறிலங்கா அரசால் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என்பதே பல்கலைக்கழக மாணவராகிய எமது நிலைப்பாடாகுமென நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கைகளின் விபரம் வருமாறு:-

ஸ்ரீலங்கா இனவாத அரசு இன்று தமிழ்பேசும் மக்கள்மீது முழுஅளவிலான யுத்தமொன்றை நடாத்திக்கொண்டிருக்கின்றது. வட-கிழக்கு பகுதி முழுவதிலும் இதுவரை 1000 இற்கும் மேற்பட்ட தமிழ்பேசும் மக்கள் சிங்களப்படைகளினாலும், சிங்களக் காடையர்களினாலும் கொல்லப்பட்டு விட்டனர்.

கிழக்கு மாகாணமான மட்டக்களப்பு, அம்பாறை, திருக்கோணமலை ஆகிய மாவட்டங்களில் பெருந்தொகையாக தமிழ் பேசும் மக்கள் கொலை செய்யப்படுகின்றார்கள். எஞ்சியவர்கள்அகதிகளாகஅடித்து விரட்டப்படுகின்றார்கள்.

தமிழ் பெண்கள் பாலியல்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பன்குளத்தில் இராணுவம் காடையர் அட்டகாசம் தமிழர் சொத்துக்கள் கொள்ளை

(பன்குளம்)

ஊர்காவல்படைகாடையர்களும் இராணுவ சீருடைதரித்த குண்டர்களும் பன்குளம் பகுதியில் கடந்த சிலவாரகாலமாக தமிழர் வீடுகள்மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை நடாத்திவருகின்றனர். இதனால் அ பகுதியில் வாழ்ந்து வந்த ஏராளமான தமிழ் மக்கள் அகதிகளாக்கப்பட்டு வடக்குநோக்கி அடித்து விரட்டப்பட்டு வருகின்றனர்.

இதனைத்தொடர்ந்து அப்பகுதி ளில் தமிழீழ விடுதலை புலிகள் விழிப்பாக இருந்து காடயர்களை எதிர்த்து வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்தே

(4ஆம் பக்கம் பார்க்க)

# அகதிமுகாம்களுக்கு சீராக உதவி தமிழீழ ஆய்வு நிறுவனம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம் பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்கள் (அகதி முகாம்கள்) ஒரு சீரான முறையில் உதவிகளைப் பெறும் வகையில் தமிழீழ ஆய்வு நிறுவனம் சில நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

தொண்டர் ஸ்தாபனங்கள் நினைத்தபடி உதவிகளை வழங்குவதால் சகல நிலையங்களுக்கும் சமமான முறையில் உதவிகள் போய்ச் சேர்வதில்லை என்பதை அறிந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய நடவடிக்கையின் படி சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பளை, மானிப்பாய், அளவெட்டி ஆகிய இடங்களுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் (ரி: ஆர். ஆர். ஓ.), சர்வோதயம், நெற்மோ ஸ்தாபனம் ஆகியன உதவிகளை வழங்கும்.

காரைநகர், பண்டத்தரிப்பு, சங்கானை, சுழிபுரம் ஆகிய இடங்களுக்கு றெட்பானா, செஞ்சிலுவைச் சங்கம் ஆகியன உதவிகளை வழங்கும்.

யாழ். மாநகர எல்லைக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பதுங்கு குழிக்குள் இருந்து சீனி மூடைகள் மீட்கப்பட்டன


(விசேட நிருபர்)

பதுங்கு குழியில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த ஐந்து சீனி மூடைகள் கடந்த 4 ஆம் திகதி புதனன்று இரவு தமிழீழ விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன. கொக்குவில் புகையிரத நிலையத்திற்கு முன்பாக பிறவுண்வீதி, வீடொன்றில் இருந்தே சீனி மூடைகள் மீட்கப்பட்டதாகத் தெரிய வருகி (4 ஆம் பக்கம் பார்க்க)

[library stamp] ... நூலகம்



# ஓராண்டு கண்ணீர் அஞ்சலி



## செல்வன் சண்முகம் உதயவர்மன் [பேபி]

(மு/ புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய கணித விஞ்ஞானப் பிரிவு உயர்தர வகுப்பு மாணவன், யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவன்)

அன்னையின் மடியில் — அந்நியன் பிடியில்

# கிளிநொச்சி ராணுவமுகாமிலிருந்து தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராணுவமுகாமிலிருந்து கடந்த செவ்வாய் தொடர்ச்சியாக ஷெல் அடிக்கப்பட்டது.

இதனால் இராணுவ முகாமுக்கு அண்மையில் குடியிருந்த ஒரு சில மக்களும் கூட தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றனர்.

கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி இராணுவ முகாமுக்கு உணவுப் பொருட்களையும், மருந்து வகைகளையும் ஏற்றிக்கொண்டு வந்த இரண்டு ஹெலிகப்டர்களை தரையிறங்க விடாது விடுதலைப் புலிகள் தாக்குலை மேற்கொண்டனர்.

இதைத் தொடர்ந்து இராணுவத்தினர் மறுநாள் செவ்வாய்க்கிழமை தொடர்ச்சியாக கிராமங்களை நோக்கி ஷெல்களை அடித்தவண்ணம் இருந்தனர்.

பொதுமக்கள் ஏற்கனவே பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிட்டதாலும், எஞ்சியிருந்த ஒருசிலரும் கூட ஷெல் அடி தொடங்கியதும் தூர இடங்களுக்குச் சென்றுவிட்டதாலும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. (49)

## அடையாள அட்டை

சாம்பல்தீவு திருக்கோணமலை என்ற முகவரியைக்கொண்ட பாக்கியராசா நேமிநாதன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை ஒன்று பளையில் கண்டெடுககப் பட்டுள்ளது. உரியவர் இதைப் பளை தபால் நிலையததில் பெற்றுக் கொள்ளலாம்.

## அறிவித்தல்

**வரையறுக்கப்பட்ட ஹட்டன் தேசிய வங்கி**
**54, ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

மேற்படி எமது வங்கி மட்டுப்படுத்தப்பட்ட பணக்கொடுக்கல் வாங்கல்கள் மு. ப. 9.00 மணி தொடக்கம் மு. ப. 9.30 மணிவரை நடைபெறுகின்றது என்பதனையும் நிலைமைகளைப் பொறுத்து சேவைநேரம் மாற்றப்படும் என்பதனையும் வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

- முகாமையாளர்

(R/ 502)

## வரிவிளம்பரம்

### இடம் மாற்றம்

அண்ணா கோப்பிக்கடை, நவீன சந்தை, யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த எமது ஸ்தாபனம் மக்களுக்கு சேவை செய்யும் முகமாக திருநெல்வேலிச் சந்தைக்கு அருகாமையில் யாழ்ப்பாணம் நோக்கிய பாதையில் சாயி மெடிக்கலுக்குப் பக்கத்தில் நிறுவப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். அண்ணா கோப்பி, திருநெல்வேலி.

(B-1223)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

### வேலுப்பிள்ளை சிறீமுருகதாசன்

(முருகதாஸ்)

| தாயின்மடியில் | தாயகமண்ணிற்காய் |
|---|---|
| 6- 12- 65 | 22- 06- 86 |


பாசவலை வீசி என்னைப் பண்புடனே ஏற்றீர்- தமிழ்
ஈழத்தினைக் காக்கவே வீரத்துடன் புறப்பட்டீர்- எம்
தாயகத்தை மீட்கவென்று
தரணி மிசைத் துயின்று விட்டீர்- ஆண்டுகள்
நான்கானாலும் எமது இதயத்தில்
என்றும் நிலைத்திருப்பீர்கள்.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, ஆசை மகள்
ஸ்ரீ அபர்ணா, மாமா, மாமி
சகோதர சகோதரிகள்,
மச்சான்மார், மச்சாள்மார்
உறவினர்கள்.

பலாலி தெற்கு
வசாவிளான்

(R-400)

தரமான - நாகரிகமான
'சேட்டிங்' துணி வகைகள்
வேட்டிகள் மற்றும்
புடைவை வகைகளின்
உற்பத்தியாளர்களுள் தனித்துவம்



# செல்வன் சண்முகம் உதயவர்மன் [பேபி]

(மு/ புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய கணித விஞ்ஞானப் பிரிவு உயர்தர வகுப்பு மாணவன், யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவன்)

அன்னையின் மடியில் 27 - 02 - 1972

அந்நியன் பிடியில் 19 - 06 - 1989

திதி 07 - 07 - 1990

அன்பு மகனே, பாசமுள்ள தம்பியே நினைவிழந்து நாம் கலங்கித் தவிக்கிறோம். சாவரினும் உன் நினைவு சாகாதையா பேபியின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

அப்பா, அம்மா, அண்ணாமார்.

'உமா வாசம்'
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

73, பலாலி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(R-501)

வேலிச் சந்தைக்கு அருகாமையில் யாழ்ப்பாணம் நோக்கிய பாதையில் சாயி மெடிக்கலுக்குப் பக்கத்தில் நிறுவப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். அண்ணா கோப்பி, திருநெல்வேலி.

(B-1223)

அன்பு மனைவி, ஆசை மகள்
ஸ்ரீ அபர்ணா, மாமா, மாமி
சகோதர சகோதரிகள்,
மச்சான்மார், மச்சாள்மார்
உறவினர்கள்.

பலாலி தெற்கு
வசாவிளான்

(R-400)


தரமான - நாகரிகமான
'சேட்டிங்' துணி வகைகள்
வேட்டிகள் மற்றும்
புடைவை வகைகளின்
உற்பத்தியாளர்களுள் தனித்துவம்
மிக்கவர்கள்

# கணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

தாவடி வடக்கு,
கோக்குவில்.

உங்கள் திருப்தியே
எங்கள் மகிழ்ச்சி!

(B1220)



# வாடிக்கையாளர்களுக்கு

74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்; இயங்கிவந்த "நியூ லலிதா ஜுவலர்ஸ்" ஸ்தாபனம்

நாட்டின் நிலைமை காரணமாக இதுவரை காலமும் இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த வியாபாரம் வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும்

**7-7-1990 சனிக்கிழமை காலை 9-00 மணிதொடக்கம் மாலை 1-00 மணிவரையும் வியாபாரத்திற்காக மேற்படி ஸ்தாபனம் திறந்திருக்கும் என்பதை தெரியப்படுத்துகின்றோம்.**

இதுவரை காலமும் எமக்கு அளித்த ஆதரவை மீண்டும் தருவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

வீட்டு முகவரி: நம். 55, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

இங்ஙனம்

**நியூ லலிதா ஜுவலர்ஸ் ஸ்தாபனம்**

(B-1227)

சிந்தனைக்கு

தேசிய அநீதியே தேசிய அழிவிற்கு
நிச்சயமான பாதை
- வில்லியம் கிளேட்ஸ்டோன்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 07-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# நெருக்கடிகளை தணிக்க...

தமிழ்ப் பிரதேசங்கள் எங்கிலும் சிறிலங்கா இராணுவமும், காடையர்களினாலும் அகதிகளாக்கப் பட்டுள்ள தமிழ் மக்கள் பல்வேறு வழிகளாலும் வடக்கு நோக்கி வந்துகொண்டிருக்கின்றார்கள். இவ்வாறு வரும் அகதிகள் பெரும்பாலும் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கே வர விரும்புகின்றார்கள். அங்குதான் தமக்கு ஓரளவு பாதுகாப்பு உண்டு என்று எண்ணுவதே அதற்குக் காரணமாகும்.

யாழ். குடாநாடு தற்பொழுதேபெருமளவு அகதிகளைக் கொண்டுள்ளது. குடாநாட்டில் தற்பொழுது 331க்கு மேற்பட்ட அகதிமுகாம்களும் 43500 க்கு மேற்பட்ட குடும்பங்கள் அகதிகளாக உள்ளனர். இந்நிலையில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்றும் அகதிகள் வந்துசேரும்பட்சத்தில் குடாநாட்டில் பெருமளவில் பல்வேறு நெருக்கடிகள் தோன்றும் என்பது திண்ணம்.

அதிலும் யாழ். நகரப்பகுதி குடிசன நெருக்கடி மிக்கது. அத்தோடு அடிக்கடி விமானத் தாக்குதலுக்கும் ஷெல் தாக்குதலுக்கும் உட்படுவது. இதனால் அகதி முகாம்களை நகரை அண்டி அமைப்பதனால் உயிர் சேதங்கள் அதிகரிக்க வாய்ப்புகள் அதிகம் உண்டு. இதனால் நகருக்கும், நகரை அண்டிய பகுதிகளுக்கு அப்பால் அகதிமுகாம்கள் அமைத்தல்பாதுகாப்பானதாகும்.

பொதுவாகவே யாழ்ப்பாணக் குடாநாடு குடிசன நெருக்கமானதாகவும், விவசாய நிலப்பரப்புக்கள் குறைவாகவும் கொண்ட பகுதியாகும். அகதிகள் அற்ற சாதாரண காலத்தில்கூட போக்குவரத்துக்கள் தடைப்படும்போது உணவு, எரிபொருள் பற்றாக்குறை ஏற்படும் மாவட்டமாகும். ஆகவே உணவுப் பற்றாக்குறை ஏற்படுவது தவிர்க்க முடியாத அம்சமாகவே இருக்கும்.

ஆனால் குடாநாடு பொதுவாக நன்னீர் பிராந்தியமாக இருப்பதும், நீரைப் பெறுவதற்கு ஓரளவு சிறந்த வழிமுறைகள் இருப்பதும் ஓரளவு அகதிகளைப் பொறுத்து சாதகமான நிலையைக் கொண்டுள்ளது.

இந்நிலையில் யாழ். குடாநாட்டை நோக்கி வரும் அகதிகள் சம்பந்தமான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பல் வேறு வழிமுறைகளைக் கையாளல் வேண்டும். இதில் முதலாவதாக அகதிகளை பரவலாகக் குடியமர்த்துதல் சிறப்பானதொரு வழிமுறையாகும்.

யாழ்ப்பாணக் குடாநாடு ஏனைய தமிழ்ப்பகுதிகளைப் போல் அல்லாது போக்குவரத்து வசதிகளைக் கொண்ட மாவட்டமாகும். இதனால் அகதிமுகாம்களை குடாநாடு எங்கும் பரவலாகஅமைக்கலாம். அத்தோடு சிறியவையாகவும் அமைக்கலாம்.

சிறிய சிறிய அகதிமுகாம்களாக அகதிமுகாம்களை கிராமங்களுக்கு நகர்த்தும்போது அகதிமுகாம்களின் சுகாதார நிலைமைகளை ஓரளவு பராமரிப்பு இன்றியே பேணலாம்.

ஓரளவு போதிய கிணறுகள் கிராமங்களில் இருப்பதினால் அகதிகள் குளித்தல், குடிநீர் போன்ற பிரச்சினைகள் தோன்றாமல் இருப்பதோடு உடுப்புக்கள்

# நேதாஜி திரட்டிய தாயக மீட்பு நிதி



கிழக்காசியாவில் இந்திய தேசிய இராணுவத்தை நிறுவிய நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்கள் மலேயா, சிங்கப்பூர், பர்மா பகுதிகளில் வாழ்ந்த இந்திய மக்களிடமிருந்து தாயக மீட்பு நிதியைப்பெற்று விடுதலைப் போராட்டத்தை நடத்தியதுடன் கோடிக்கணக்கான ரூபா மூலதனத்துடன் சுதந்திர இந்திய அரசுக்கென ஒரு தேசிய வங்கியையும் நிறுவினார்.

கிழக்காசியாவில் இந்தியாவின் தற்காலிக அரசைப்பிரகடனப்படுத்தியதன் பின் நேதாஜி அவர்கள் பல்வேறு இடங்களுக்கும் சென்று இந்திய மக்களிடம் இயக்கத்திற்கான பணத்தேவைபற்றி உரையாற்றினார். 1943ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 24 ஆம் நாள் சிங்கப்பூரில் இந்திய மக்கள் முன் நேதாஜி அவர்கள் உரையாற்றுகையில்,

''தாயகத்தை மீட்கும் யுத்த நிதிக்கு குறிப்பாக ஏழை மக்களும், நடுத்தரமக்களும் செய்துவரும் உதவி மிகவும் உற்சாகமளிப்பதாக இருக்கிறது. ஜான்சியைச் சேர்ந்த ஒரு சலவைத் தொழிலாளி தான் கஷ்டப்பட்டு உழைத்துச் சேகரித்து வைத்திருந்த தொகையை அப்படியே யுத்த நிதிக்கு அர்ப்பணம் செய்ததுடன் போராட்டம் முடியும் வரையில் நமது வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் உடைகளைச் சலவை செய்து கொடுக்க முன்வந்துள்ளார். ஓர் ஏழை நாவிதர் பிற்காலத்துக்கெனச் சேமித்து வைத்திருந்த முழுப்பணத்தையும் (300ரூபா) அப்படியே யுத்த நிதிக்குக் கொடுத்துவிட்டார், பலர் தங்களுக்குச் சொந்தமான சொத்துக்களையும் மாடுகளையும் சுதந்திரப் போராட்டத்துக்குக் கொடுத்து விட்டு எமது தேசிய இராணுவத்தில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர்.

ஏழைகள் தங்களுக்குச் சொந்தமான சொத்துக்களையும், தங்களையும் கூடத் தாய் நாட்டின் சுதந்திரத்துக்காகத் தியாகம் செய்து வரும் இந்நேரத்தில், செல்வந்தர்கள் வசதி படைத்தவர்கள் தங்கள் சொத்தில் 5 விகிதம் கொடுப்பதா 10 விகிதம் கொடுப்பதா என்பதைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறார்கள் அவர்கள் தங்களது இந்தப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏழை மக்கள் தங்களது உடைமைகளையும் உயிரையும் கூட நாட்டுக்காகத் தியாகம் செய்ய உற்சாகத்துடன் முன் வந்துகொண்டிருக்கையில செல்வந்தர்கள் வசதி படைத்தவர்கள் அவ்விதம் கணக்குப் பார்த்துக் கொண்டிருப்பது சரியன்று. எனவே செல்வந்தர்கள் வசதி படைத்தவர்கள் தங்கள் மனப்போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்.

போர் முனைக்குச் செல்லும் தொண்டர் தாய்நாட்டின் விடுதலைக்கான 5 சதவிகித இரத்தம் சிந்த வேண்டுமா 10 சதவிகிதம் இரத்தம் சிந்த வேண்டுமா என்று என்றுமே கேட்பதில்லை. தமது இரத்தம் முழுவதையும் சிந்தவே அவர்கள் போர் முனைக்குச் செல்லுகின்றனர். கோடிக்கணக்கான டாலர் தொகையைக் காட்டிலும் அத்தகைய தொண்டர் ஒருவரின் உயிர்தான் விலை மதிக்க முடியாததாகும். பணம் படைத்தவர்கள் தாய் நாட்டுக்காகத் தமது உயிரைத் தியாகம் செய்ய முன் வராவிட்டாலும் தங்கள் உடைமைகளையாவது நமது புனிதமான விடுதலை இயக்கத்துக்குக் கொடுத்துதவ வேண்டாமா? இதுவரையில் நமது இயக்கத்துக்குத் திருப்திகரமான முறையில் உதவி செய்யாத ஒரு சில செல்வந்தர்கள் தங்கள் நிலையை இனிமேலாவது மாற்றிக் கொள்வார்கள் என நம்புகிறேன்'' தென்னாசியாவில் 30 லட்சம் இந்தியர்கள் இருக்கின்றார்கள் எனக்குத்தேவையானதெல்லாம் போராட்டத்துக்கு 3 லட்சம் தொண்டர்களும், 30 லட்சம் டொலர் பணமுமேயாகும் என்று கூறினார்.

இது போன்று நேதாஜி சுபாஸ் அவர்கள் பல்வேறு இடங்களிலும் இந்திய மக்களைச் சந்தித்து அவர்கள்முன் உரையாற்றியதைத் தொடர்ந்து கிழக்காசியாவில் வாழ்ந்த இந்திய மக்களில் ஏழை பணக்காரன், நடுத்தர வர்க்கத்தினர் எனப்பல்வேறு தரப்பட்டவர்களும் பொன்னையும் பொருளையும் வாரிவாரி கொடுத்தனர். பலர் தங்கள் சொத்துக்கள் அனைத்தையுமே இயக்கத்திடம் ஒப்படைத்து விட்டு தாமும் தேசிய இராணுவத்தில சேர்ந்தனர்.

பொதுக் கூட்டங்களில் நேதாஜி சுபாஸ் அவர்களுக்கு போடபபட்ட மாலைகள் இலட்சக்கணக்கான ரூபாய்க்கு ஏலம் போயிற்று ஒரு தடவை 12 இலட்சம் ரூபாவுக்கு ஒரு மாலை ஏலம் போனது.

சிங்கப்பூரில் ஒரு கூட்டத்தில் சுபாஸ் அவர்கள் தனக்குப் போடப்பட்ட மாலையை ஏலம்விட்டபோது வசதி படைத்த செல்வந்த இளைஞன் ஒருவன் பலரோடு போட்டி போட்டுக் கொண்டு அந்த மாலையின் ஏலத் தொகையை இலட்சக்கணக்கில் உயர்த்திக் கேட்டுத் கொண்டேவந்தான். போட்டி உச்சக்கட்டத்தை அடைந்தது திடீரென்று அந்த இளைஞன் ''என் சொத்துக்கள் முழுவதையும் வீட்டையும் கொடுக்கிறேன்'' என்று ஆவேசமாகக் கத்தினான். தான் எடுக்க முடியாத அளவுக்கு மாலையின் ஏலத்தொகை அதிகரித்து விடுமோ என்ற ஏக்கத்தினாலேயும், அந்த ஏலத்தைத் தானே எடுத்து விட வேண்டும் என்ற ஆர்வத்தினாலேயும் தான் அவன் அவ்வாறு நடந்துகொண்டான். அது மட்டுமல்ல செல்வந்தக் குடும்பத்தில் ஒரேபையனாக இருந்த அந்த இளைஞன், தானும் தேசிய இராணுவத்தில் சேர்ந்து விட்டான்.

இவ்வாறு எண்ணற்ற குடும்பங்கள் தேசிய விடுதலைப் போராட்ட இயக்கத்தில் கலந்து கொண்ட விபரங்கள் நெஞ்சை உருக்க வல்லவை. மனைவியையும், பெண்களையும் பெண்கள் படையான ஜான்சிராணி படையில் சேர்த்து விட்டு தாமும் தேசிய இராணுவத்தில் சேர்ந்து கொண்டவர்கள் பலர்.

ரங்கூனிலிருந்த ஹபீப் என்ற தனவந்தர் நகைகள், ரொக்கம், வீடு நிலமென தன்னிடமுள்ள 1 கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட சொத்துக்களை நேதாஜியிடம் ஒப்படைத்தார். சுதந்திர இந்திய அரசு பிரகடனப்படுத்தப்பட்ட மண்டபத்தில் ஒரு தடவை வந்து உட்காருவதற்கே ஒருவர் ஒரு இலட்சம் ரூபாவை வழங்கினார்.

நேதாஜியின் எடைக்கு எடை தங்கத்தை போராட்ட நிதியாக வழங்குவதென அறிவித்து சிங்கப்பூரில் இருந்த பெண்கள் எல்லாரும் தாங்கள் அணிந்திருந்த நகைகளைக் கழற்றித் தந்தனர்.

சுதந்திர இந்திய அரசுக்கு தேசிய வங்கி ஒன்று தேவைப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டதும் ரங்கூனைச் சேர்ந்த கோடீஸ்வரர் ஒருவர் அந்த வங்கிக்கான முதலீட்டுத் தொகையாக 50 லட்சம் ரூபாவை நேதாஜியிடம் தானே முன்வந்து வழங்கினார்.

இவ்வாறு கிழக்காசிய இந்திய மக்கள் அளித்த பணத்தைக் கொண்டுதான் சுதந்திர இந்திய அரசு போராட்டத்துக்குத் தேவையான ஆயுதங்களையும், வெடி மருந்துகளையும் வாங்கியது, மேற்கொண்டு தேவையான பணத்துக்காக இந்திய சுதந்திர அரசு அங்குள்ள இந்திய வியாபாரிகளிடம் வியாபாரிகளைக் கொண்ட ஒரு குழுவின் பரிந்துரைக் கேற்ப வரிகளை விதித்தது.



## மில்லரின் நினைவாக......

''நெல்லியடி முகாம் மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலானது எனது பதவிக்கும் கடமைக்கும் அச்சுறுத்தலாக அமைந்துவிட்டது. எனது இரா

# நேட்டோ மகாநாட்டிற்கு கொர்பசேவுக்கு அழைப்பு

(லண்டன்)

எதிர்வரும் நேட்டோ உச்சிமாநாட்டில் உரையாற்றுவதற்கு சோவியத் ஜனாதி

அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இங்கு பேசிய பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாகிரட் தாட்சர் சோவியத் யூனியனின்

இதுவரை 40 வருடகாலமாக நடைபெற்ற நேட்டோ அமைப்பு மாநாடுகளைவிட இம்மாநாடு மிக முக்கியத்து

இருப்பதும், நீரைப் பெறுவதற்கு ஓரளவு சிறந்த வழிமுறைகள் இருப்பதும் ஓரளவு அகதிகளைப் பொறுத்து சாதகமான நிலையைக் கொண்டுள்ளது.

இந்நிலையில் யாழ். குடாநாட்டை நோக்கி வரும் அகதிகள் சம்பந்தமான பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பல் வேறு வழிமுறைகளைக் கையாளல் வேண்டும். இதில் முதலாவதாக அகதிகளை பரவலாகக் குடியமர்த்துதல் சிறப்பானதொரு வழிமுறையாகும்.

யாழ்ப்பாணக் குடாநாடு ஏனைய தமிழ்ப்பகுதிகளைப் போல் அல்லாது போக்குவரத்து வசதிகளைக் கொண்ட மாவட்டமாகும். இதனால் அகதிமுகாம்களை குடாநாடு எங்கும் பரவலாக அமைக்கலாம். அத்தோடு சிறியவையாகவும் அமைக்கலாம்.

சிறிய சிறிய அகதிமுகாம்களாக அகதிமுகாம்களை கிராமங்களுக்கு நகர்த்தும்போது அகதிமுகாம்களின் சுகாதார நிலைமைகளை ஓரளவு பராமரிப்பு இன்றியே பேணலாம்.

ஓரளவு போதிய கிணறுகள் கிராமங்களில் இருப்பதினால் அகதிகள் குளித்தல், குடிநீர் போன்ற பிரச்சினைகள் தோன்றாமல் இருப்பதோடு உடுப்புக்கள் தோய்த்தல், காய வைத்தல் போன்றவற்றிற்கும் வசதியாக இருக்கும். நகர்ப் பகுதியில் இடநெரிசலான இடங்களில் முகாம்களை அமைக்கும்போது மேற்கூறிய சுகாதார சம்பந்தமான வசதிகளை அகதிகளுக்கு வழங்குதல் சிரமமானதாவும், ஒழுங்குபடுத்தப்பட்டும் இருக்கவேண்டும் என்பதும் முக்கியமானதாகும்.

கிராமங்களில் அகதிமுகாம்களை அமைக்கும்போது சிறிய அளவில்தானும் அவர்களுக்கு சில பொருளாதார வாய்ப்புகளை அது வழங்கக்கூடியதாக இருக்கும். விவசாய நிலங்களை அண்டியதாக முகாம்கள் அமைக்கப்படும் பட்சத்தில் தோட்டங்களில் வாரத்தில் ஓர் இரு நாட்களாவது வேலை கிடைக்கலாம். கரையோர கிராமங்களில் அமைப்பதினால் கடலுணவுகள் சிறிய அளவில் கிடைக்கலாம்.

இவ்வாறு கிடைப்பவை பெரிய அளவினதாக இல்லாமல் இருப்பினும் உதவியாக இருக்கும் என்பதே எமது கருத்தாகும்.

மேலும் வழக்கில் இருந்து அருகிவருகின்ற சில உணவுப் பொருட்கள் கிடைக்கலாம். இவற்றைவிட நகரைவிட உற்பத்திப் பொருட்கள் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். எடுத்துக்காட்டாக விவசாய நிலப்பரப்பை அண்டிய முகாம்களுக்கு மரக்கறியைக் குறைந்த விலையில் பெறலாம். மீன்பிடிக் கிராமங்களில் இருந்தால் மீனை ஓரளவு மலிவாகப் பெறலாம்.

அதாவது இன்றைய நிலையில் தமிழ் பேசும் மக்களுக்கு சிறுபொருளும் சிறு உதவியும் பெரும் நன்மை பயக்கக்கூடியதாகும். ஒவ்வொரு பொருளிலும் இருந்தும் உச்சப் பயன்பாட்டைப் பெற்றுக்கொள்ளுதல் எமது நோக்கமாக இருக்கவேண்டும். விரயம் என்பது தண்டனைக்குரியதாக இருக்க வேண்டும்.

கொடுப்பதா என்பதைப்பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறார்கள் அவர்கள் தங்களது புனிதமான விடுதலை இயக்கத்துக்குக் கொடுத்துதவ வேண்டாமா? இதுவரையில் தடவை 12 இலட்சம் ரூபாவுக்கு ஒரு மாலை ஏலம் போனது.

களை நேதாஜியிடம் ஒப்படைத்தார். சுதந்திர இந்திய அரசு பிரகடனப்படுத்தப் ... வியாபாரிகளைக் கொண்ட ஒரு குழுவின் பரிந்துரைக் கேற்ப வரிகளை விதித்தது.

# நேட்டோ மகாநாட்டிற்கு கொர்பசேவுக்கு அழைப்பு

(லண்டன்)

எதிர்வரும் நேட்டோ உச்சிமாநாட்டில் உரையாற்றுவதற்கு சோவியத் ஜனாதிபதி கொர்பசேவை அழைக்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் விடுத்த யோசனையை நேட்டோ அமைப்பு நாடுகள் வரவேற்றுள்ளன.

லண்டனில் தற்போது நடைபெறும் 40 ஆவது நேட்டோ உச்சிமாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி பேசியபோது இதனைத் தெரிவித்தார்.

சோவியத் யூனியனில் இருந்து இராணுவ அச்சுறுத்தல் மிகவும் குறைந்து வருவதால் நேட்டோ அமைப்பிலும் மாற்றம் தேவை என்றும் அமெரிக்க ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சோவியத் யூனியனின் இராணுவத்தின் பலமும் வல்லமையும மிகப்பெரிதாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டு பேசினார்.

சோவியத் ரஷ்யாவிடம் நல்லெண்ணம் காண்பிக்க இது ஒரு நடவடிக்கையாக இருப்பதால் சோவியத் தலைவரையும், ஏனைய வார்ஸா ஒப்பந்த நாடுகளின் தலைவர்களையும் மாநாட்டிற்கு அழைக்கவும் இங்கு இணக்கம் காணப்பட்டதாக பிரான்ஸின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இங்கு பேசிய பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாகிரட் தாட்சர் சோவியத் யூனியனின் படைப்பலம் குறித்து அச்சம் தெரிவித்தார்.

இதுவரை 40 வருடகாலமாக நடைபெற்ற நேட்டோ அமைப்பு மாநாடுகளைவிட இம்மாநாடு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

## லைபீரியா இராணுவத் தளபதி நாட்டை விட்டு ஓடிவிட்டார்

(மொன்ரோபியா)

லைபீரியாவில் இடம்பெற்று வரும் கிளர்ச்சிக்காரரின் நடவடிக்கைகளினால் அதன் இராணுவத் தளபதி லெப்ரினன் ஜெனரல் சார்ள்ஸ் யூடு நாட்டைவிட்டு தப்பி ஓடிவிட்டார்.

லைபீரியா ஜனாதிபதி சாமுவேல் டோவுக்கு நெருக்கமான இவர் சில தினங்களுக்கு முன்னரே இராணுவத் தளபதி பதவியை ஏற்றார்.

இதேவேளை தாம் பதவி விலகப்போவதாக உறுதி கூறியுள்ள லைபீரிய ஜனாதிபதி நாட்டைவிட்டு வெளியேற அமெரிக்காவின் உதவியை நாடியுள்ளார்.

இங்குள்ள அமெரிக்க தூதுவருடன் அவர் இது குறித்து பேச்சு நடாத்தினார். அமெரிக்க கடற்படை கப்பல் ஒன்றும் லைபீரியாவுக்கு அருகில் தரித்து நிற்கிறது.

## மலையக தமிழர்களுக்கு தமிழகத்தில் அசௌகரியம்

(சென்னை)

தமிழ் நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ்மக்கள் தங்களைப் பற்றிய ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டுமன்ற அறிவித்தலை தொடர்ந்து ஒப்பந்த அடிப்படையில் அங்கு சென்று தங்கியுள்ள இந்திய வம்சாவழியினரும் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சிறிமா - சாஸ்திரி, சிறிமா- இந்திரா, நேரு - கொத்தலாவலை ஆகிய ஒப்பந்தங்களின் அடிப்படையில் இலங்கையிலிருந்து இந்திய கடவுச் சீட்டுடன் சென்றுள்ள தமிழ் மக்களே இவ்வாறு பல அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## துக்கதினம்

மெக்காவில் ஹஜ் யாத்திரிகர்கள் ஜனநெரிசலில் மரணமானதில் இறந்த ஐநூற்றி அறுபத்திரண்டு இந்தோனேஷியா முஸ்லிம்களுக்கு அனுதாபம் தெரிந்து நேற்று இந்தோனேஷியாவில் தேசிய துக்கதினம் அனுட்டிக்கப்பட்டது.

மலேஷியா யாத்திரிகர்கள் பத்தொன்பது பேர் இங்கு இறந்துள்ளதாக மலேஷியா அறிவித்துள்ளது.

## மில்லரின் நினைவாக......



''நெல்லியடி முகாம் மீது தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலானது எனது பதவிக்கும் கடமைக்கும் அச்சுறுத்தலாக அமைந்துவிட்டது. எனது இராணுவ சேவையில் மறக்கமுடியாத சம்பவம் என்றே இதைக் கருதுகிறேன். எனது சேவையின் இறுதிக் காலத்தில் இந்நாட்டை அச்சுறுத்தி வரும் ஒரு தீவிரவாதத் தலைவரையும் அவரது குழுவினரையும் களத்தில் சந்திப்பது குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்'' - இவ்வாறு கூறியவர் ஸ்ரீலங்காவின் ராணுவத்தின் முன்னாள் வடமராட்சிப் பகுதி இணைப்பதிகாரியாக இருந்த பிரிகேடியர் ரூபசிங்கா ஆவர்.

05 - 07 - 1987

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மிக முக்கியமான தினம். அன்றுதான் 'கரும்புலி காப்டன் மில்லா' வடமராட்சி மக்களை மிருகத்தனமாக வதைத்துக் கொண்டிருந்த ஸ்ரீலங்கா ராணுவத்தின் நெல்லியடி முகாம் மீது தன்னுயிரைத் தூசாக்கி பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொண்டு முகாமை நிர்மூலமாக்கிக் காவியம் படைத்த தினம்.

'ஒப்பரேசன் லிபரேசன்' என்ற பெயருடன் வடமராட்சியை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர ஸ்ரீலங்கா இனவெறி அரசு மேற்கொண்ட காட்டுமிராண்டித்தனமான ராணுவ நடவடிக்கையின் அனர்த்தங்களால் திகைப்புற்று நொந்துபோயிருந்த தமிழீழ மக்கள் மத்தியிலே புதிய நம்பிக்கையும் புத்துணர்வையும் ஏற்படுத்திய தினம்.

இறுமாப்பில் மிதந்த ஜே. ஆர். அரசினை அலமலந்துபோகச் செய்து இந்தியாவிடம் சரணாகதி அடையச் செய்ய வழி வகுத்த தினம்.

-மில்லர்

இந்த மகத்தான தியாக வீர புருஷனின் பெயர் உலகெங்கும் மக்கள் மனங்களில் ஊன்றிப் பதிக்கப்பட்ட தினம்.

மில்லர்; வசந்தன் அவன் இயற்பெயர், வசதியான குடும்பத்தின் சுகபோகங்களை, மண்மீட்புக்காய் உதறியெறிந்தவன். மகத்தான மன உறுதி படைத்தவன்.

- இதனால்தான் அவன் சொன்னான் ''மரணத்தை நான் நேசிக்கிறேன் அதனால் எம்மக்கள் விடுதலை அடைவார்கள்'' என்று.

- வாழ்க்கைக்கு மரணத்தால் முழுமையையும், அர்த்த புஷ்டியையும் கொடுத்தவன் அவன்.

தாக்குதல் நடைபெற இருந்த தினம். அத்தினம் பற்றி உனது நண்பர்கள் கூறுவார்கள்...

-மாபெரும் செயல் ஒன்றை செய்து முடிக்கவேண்டிய தியாகப் பணி உன்னிடம் ஒப்படைக்கப்படுகிறது.

- தாய் நாட்டுக்காக மிக உயர்ந்த தியாகம் ஒன்றை செய்து முடிக்கும் பாக்கியம் உனக்கு கிடைக்கிறது.

- அப் பணியினை உறுதியோடு பூரணமாகச் செய்து முடிக்கும் பணியில் கண்ணும் கருத்துமாகச் செயல்படுகிறாய்....

- வாகனத்தைச் சரிபார்த்தல்.... சக்கை அடைத்தல் அவற்றை ஏற்றுதல்... எல்லாவற்றையும் நீயே ஏற்றுக் கொள்கிறாய்.

- எல்லாருடனும் கலகலப்பாகவே இருக்கிறாய்.

- திட்டப்படி இவ்வளவு தூரம் தான் போகவேண்டும் என்றதும் இதைவிடக் கூடத் தூரமானாலும் போவேன் என்கிறாய்.

- மரணத்தை நிச்சயப்படுத்திக் கொள்ளுமாப் போன்று பொக்கற்றுள் இருந்த காசை அருகிலுள்ள நண்பர்களிடம் கொடுக்கிறாய்

நேரம் போகிறது என்று ப[illegible]ரக்கிறாய்.

ஆனால் மரணத்தை அரவணைக்கும் பொழுதினை வினாடிப்பொழுதில் எண்ணிக் [illegible]காண்டிருப்பவனாக இல்லை...

அன்றைய தினம், உன் தியாக[illegible]நனை நிகழ்ந்த அந்தக் கணம... தமிழ் மக்களது வி[illegible]லைப் போராட்டம் அடுத்த பரிணாமத்திற்கான அத்திவாரத்தை உறுதியாகவே இட்டது.

மில்லர்...
வீரம் உன் காலடியில்
விழுந்தே கிடக்கிறது
காலன் உன் காலடியில்
கலங்கிப் போய் கிடக்கின்றான்
வாழ்வைத் தூசாக்கி
மரணத்திற்கு மகத்துவம்
கொடுத்தவனே, இந்தமண்
உன்
தியாகத்தால் சிலிர்க்கிறது
உதிரத்தால் உயிர்க்கிறது.

## நெல்சன் மண்டேலாவை பிரிட்டிஷ் பிரதமர் சந்தித்தார்

(லண்டன்)

ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் பதினான்கு நாடுகளுக்கு விஜயம் செய்த ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா இறுதியாக லண்டன் வந்திருந்தார்.

லண்டனில் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மாகிரட் தாட்சருடன் அவர் மூன்று மணி நேரமாக பேச்சு நடாத்தினார்.

தென்னாபிரிக்கா மீதான பொருளாதார தடைக்கு பிதிரான கொள்கையுடைய எரதமர் தாட்சருடன் தாம் நட்புறவாகப் பேசியதாகவும், தம்மை அவர் நன்கு வரவேற்றதாகவும் மண்டேலா கூறினார்.

தாமும், தனது நண்பர்களும் சிறையில் இருந்து விடுதலைபெற திருமதி தாட்சர் உதவியதாகவும் அவர் மேலும் சொன்னார்.

இனவெறியை திருமதி தாட்சர் எதிர்ப்பவரே. ஆனால் இதனை எப்படி ஒழிப்பது என்பதில் இருவருக்கும் இடையில் கருத்து வேறுபாடு நிலவியது. நான் எனது நிலையைக் கூறினேன். அவர் தனது நிலையைக் கூறினார். இவ்வாறு திரு. மண்டேலா கூறினார்.

Registered as a News at Paper the G. P. O.

# ஈழநாதம்

## நடிகர்கள் உண்ணாவிரதம்

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை கண்டித்து சென்னையில் நடிகர்கள் நேற்று உண்ணாவிரதம் இருந்தனர். நடிகர் பாண்டியராஜன் தலைமையில் நடைபெற்ற இவ் உண்ணாவிரதத்தில் பல நடிக நடிகைகள் கலந்து கொண்டார்கள்.

# சிங்கள தேசத்தோடு இனிமேல் பேசித்தீர்வு காணமுடியாது

## மில்லர் நினைவு கூட்டத்தில் - யோகி

(நெல்லியடி)

தமிழீழம் முழுவதும் தமிழ் மக்கள் தம்மைப் பாதுகாக்கவும் தமிழ்ப் பிரதேசங்களை மீட்கவும் ஆயுதம் ஏந்த வேண்டிய காலம் இப்போது வந்து விட்டது. எமது மண்ணை நிரந்தரமாக நாம் மீட்க வேண்டும் என்றால் ஆயுதம் ஏந்துவதைத் தவிர வேறு வழியில்லை.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் யோகரெட்ணம் யோகி தெரிவித்தார்.

நேற்று முன் தினம் கரும்புலி கப்டன் மில்லரின் 3ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நெல்லியடியில் நடைபெற்ற நினைவு தினக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எங்களைப் பொறுத்தவரை தமிழீழம் என்று ஒன்று கிடைக்கும் வரை போராட்டம் தொடர்ந்து நடைபெறும் என்பதே. இக் கருத்துத் தொடர்பாக தமிழ் மக்கள் யாருக்குமே எந்த வித குழப்பங்களும் இருக்கக் கூடாது என்றார்

தொடர்ந்து பேசிய அவர் சிங்கள தேசத்தோடு தமிழ் பேசும் மக்கள் பேசித் தீர்வு ஒன்றினை காணலாம் என்ற குழப்பமும் மக்கள் மத்தியில் ஏற்படக் கூடாது.

நாம் எமது விடுதலைக்காக தேசியப் படை ஒன்றை அமைத்துக் கொள்கின்றோம்.

மில்லரின் நினைவைமீட்கும் போது மில்லரின் அதிரடி நடவடிக்கையானது தமிழ் ஈழத்தில் ஒரு திருப்பு முனையைக் குறித்து நிற்கிறது.

1987 ஆம்ஆண்டு ஸ்ரீ லங்கா இராணுவம் வடமராட்சிப் பிரதேசத்தை பிடித்து விட்டோம் எனக் கொக்கரித்துக் கொண்டிருந்த வேளையில் நெல்லியடி இராணுவ முகாம் மீது நடைபெற்ற மில்லரின் அதிரடி நடவடிக்கையானது இவ் எண்ணத்தை முறியடித்து விட்டது.

மேலும் தமிழீழத்தில் புலிகளை அழிக்க முடியாது என்பதையும், எந்தப்பிரதேசத்தையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது என்பதையும் சிங்கள அரசு உணர்ந்தது.

இந்திய அரசோடு கூட்டுச் சேர்ந்து தமிழீழப்போராட்டத்தை அழிக்க முயன்று தோல்வியும் கண்டது.

மில்லரின் வழியில் தான் விடுதலைப்புலிகள் போராடி வருகிறார்கள். மில்லருக்கு தனது சாவின் நேரம் தெரியும் ஆனால் மற்றைய போராளிகளுக்கு சாவு வரும் எனத்தெரியும் எப்போது என்பதுதான் சரியாகத்தெரியாது.

அத்தோடுபோதிய மருத்துவ வசதி கிடையாது. இதனால் சிறிய காயங்களால் கூட இறக்கலாம் என்பதும் போராளிகளுக்குத்தெரியும். அதற்காக யாரும் போரடத்தயங்கியதில்லை. இந்த மண்ணுக்காக தன்னுயிரைத்தர தயங்கியதில்லை.

தொடர்ந்து எமது மண் மீது தமது நடவடிக்கையை மேற்கொள்ள முடியாது என்பதை சிங்கள அரசுக்கு எடுத்துக் காட்டிய ஒரு சம்பவமாக இது இருக்கிறது.

இக்கூட்டத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் வடமராட்சி அரசியல் பொறுப்பாளர் குணம் தலைமை தாங்க, கப்டன் 'மில்லரின் தாயார் குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

கவிஞர் வாஞ்சிநாதன் மகளிர் பிரிவு ஜெலீமா, விடுதலைப்புலிகளின் வடமராட்சிப் பொறுப்பாளர் சூசை, மக்கள் முன்னணியின் பிரமுகர் செங்கதிர் ஆகியோரும் உரையாற்றினர்.

## தமிழ் அமைப்புகள் எதனுடனும் அரசு புரிந்துணர்வுடன் செயற்படவில்லை

(கொழும்பு)

தமிழ் மக்களது உண்மையான மன உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் ஒரு புதிய அரசாங்கத்தின் மூலமே இந்த நாட்டில் நிலையானதொரு சமாதான நிலைமையைக் கொண்டுவரமுடியும் என்றும்; மாகாண சபை திருத்தச் சட்டத்தின் மூலம் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல (சு. க.) எம். பி நேற்று முன்தினம்பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்கான திருத்தச்சட்ட விவாதங்களில் கலந்துகொண்டுபேசும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழ் அமைப்புக்கள் எதனுடனும் இன்றைய அரசு புரிந்துணர்வு அடிப்படையில் நடந்து கொள்ளவில்லை என்று விவாதத்தின்போது அரசாங்கத்தை குற்றம் சாட்டிய மேற்படி சுதந்திரக்கட்சியின் எம். பி. தற்பொழுது தமிழ்மக்கள் பிரச்சினை குறித்து யாருடன் பேசுவதென்று தெரியாது அரசு திண்டாடுவதாகவும் தெரிவித்தார்.

## இலங்கைத் தமிழர் படுகொலை முதல்வர் கருணாநிதி மீது வாழப்பாடி கண்டனம்

(சென்னை)

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் இன அழிப்பு குறித்த விடயத்தில் இந்திய மத்திய அரசு எந்தவிதமான ஆக்கபூர்வ நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு, வாழப்பாடி இராமமூர்த்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

பேரூரில் நடைபெற்ற கூட்

...என்று திரு. வாழப்பாடி குற்றம்சாட்டினார்.

முதல்வர் திரு. கருணாநிதி இலங்கை விடயத்தில் இன்னும் ஏன் மௌனியாக இருக்க வேண்டும் என்றும், கண்டி மன்னன் இராஜசிங்கனுக்கு முத்துமண்டபம் அமைத்து முடிப்பதோடு தனது கடமை முடிந்துவிட்டதாக கருணாநிதி கருதுகின்றாரா? என்றும் கேட்டார்.

இலங்கையில் நிகழும் பிரச்




### புலிகளின் கட்டுப்பாட்டிலேயே

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## புனானையிலிருந்து புறப்பட்ட படை மீது தாக்குதல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் புனானை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் வெளியேறி ஒட்டுமாவடிப் பகுதியை நோக்கிச் சென்றபோது மூன்று இடத்தில் வைத்து தாக்கப்பட்டு நிலைகுலையச் செய்யப்பட்டனர்.

புனானை இராணுவ முகாம் பகுதியிலிருந்து பலத்த ஷெல் குண்டு தாக்குதலுடன் வெளியேறிய ஏராளமான இராணுவத்தினர் ஆலம் குளம் சந்தி 4 ஆம் முச்சந்தி ஓட்டுமாவடிப்பாலம் ஆகிய மூன்று இடங்களில் வைத்து பலத்த எதிர்த் தாக்குதல் செய்யப்பட்டதால் ஒட்டுமாவடி இராணுவ முகாமை சென்றடையாமலே திரும்பவும் புனானை முகாமுக்கு ஓடி விட்டனர் என அங்கிருந்து கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஒரு அதிகாரியும் 15சிப்பாய்களும் பலி

திருக்கோணமலை மாவட்டத்தில் நூறாவது மைலில் கண்ணிவெடியில் சிக்கிய சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவரும் பதினைந்து சிப்பாய்களும் கொல்லப்பட்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனையில் கண்ணிவெடியில் சிக்கிய சிறிலங்கா சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார், மற்றும் ஒன்பது பேர் காயமடைந்தனர். (லோ)

### யாழ்நகரைநோக்கி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குதல்கள் மீண்டும் நேற்று அதிகாலை தொடக்கம் யாழ். நகரை நோக்கி நடத்தப்பட்டன.

நள்ளிரவு 12 மணிக்கும்,

### தமிழ்பேசும் மக்களை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வன்முறைக்குள்ளாக்கப்படுகின்றனர். தமிழீழப் பகுதிகள் முழுவதிலும், மக்கள் வாழும் பகுதிகள் மீதும் பாடசாலைகள், ஆலயங்கள் மீதும் விமா

### இராணுவம் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் வெறியாட்டத்திற்காக சென்றுகொண்டிருந்த இராணுவ அணி தாக்கப்பட்டு தின்நான்குஇராணுவத்தினர்கொல்லப்பட்டனர்.

இருந்தும் தொடர்ந்தும் சிங்களஊர்காவல் படையினரும் இராணுவத்தினரும் மதுபோதையில் திரும்பிவந்து பெரும் அட்டகாசம் செய்வதாக தொடர்ந்து அங்கிருந்து வந்துகொண்டிருக்கும் அகதிகள் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தனர்.

தற்போது பன்குளம் பகுதி சனநடமாட்டம் அற்ற பிரதேசமாக வெறிச்சோடிக்காணப்படுகின்றது. இக்கிராமம் திருக்கோணமலை நகரில் இருந்து பதினாறு மைல் தொலைவில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கிராமத்தில் கடந்தகாலங்களில் பொருளாதாரரீதியில் தமிழ் மக்கள் பெரிதும் நசுக்கப்பட்டுவந்தனர். குறிப்பாக பெரும்முதல் இட்டு வியாபாரம் செய்துவந்த தமிழ் முஸ்லிம் முதலாளிகளின் சொத்துக்கள் எரிக்கப்பட்டதுடன் அவர்களிடம் இருந்து ஏராளமான தொகைபணத்தையும் கொள்ளையிட்டுள்ளனர்.

### வவுனியா அரச

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அத்தியாவசிய சேவைகளான சுகாதாரத்

செயற்பட வில்லை

(கொழும்பு)

தமிழ் மக்களது உண்மையான மன உணர்வுகளைப் புரிந்துகொள்ளும் ஒரு புதிய அரசாங்கத்தின் மூலமே இந்த நாட்டில் நிலையானதொரு சமாதான நிலைமையைக் கொண்டுவரமுடியும் என்றும்; மாகாண சபை திருத்தச் சட்டத்தின் மூலம் எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல (சு. க.) எம். பி நேற்று முன்தினம்பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மாகாண சபை களுக்கான திருத்தச்சட்ட விவாதங்களில் கலந்துகொண்டுபேசும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழ் அமைப்புக்கள் எதனுடனும் இன்றைய அரசு புரிந்துணர்வு அடிப்படையில் நடந்து கொள்ளவில்லை என்று விவாதத்தின்போது அரசாங்கத்தை குற்றம் சாட்டிய மேற்படி சுதந்திரக்கட்சியின் எம். பி. தற்பொழுது தமிழ்மக்கள் பிரச்சினை குறித்து யாருடன் பேசுவதென்று தெரியாது அரசு திண்டாடுவதாகவும் தெரிவித்தார்.

# நல்லின தென்னைகள் அழிப்பதை தவிர்க்கவும்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் தொடங்கிய யுத்தகால சூழ்நிலையில் குடாநாட்டின் பல பகுதிகளில் தெங்கு பனை மரங்கள் ஏராளமாக வெட்டப்பட்டு வருகின்றது.

இந் நிலைமைபற்றி தெங்கு பனம் பொருள் அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில் சுய பாதுகாப்பு கருதி மக்கள் பதுங்கு குழிகளை அமைத்து வருகின்றனர். இது தவிர்க்கமுடியாததே, இருந்தும் தரமான நல்லின மரங்களை வெட்டி அவற்றை அழித்துவிடுவது நிச்சயமாக தவிர்க்கவேண்டும். எமது எதிர்கால பொருளாதார திட்டமிடல் அபிவிருத்திக்கு தெங்கு பனம் பொருள் மூல வளம் மிகமிக இன்றியமையாதவை என அவர் கூறினார். (லோ

# இரண்டாம் வாரத்திற்கான உலர் உணவுப் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

பாதிப்பினால் இடம்பெயர்ந்த அகதிகளுக்கு இரண்டாம் வாரத்திற்கான உலர் உணவுப் பொருள் கூடுதலான அளவு வழங்கப்படும்.

இதுபற்றி யாழ். அரசாங்க அதிபர் கருத்துத் தெரிவிக்கையில் முதற் கட்டமாக ஒரு வாரத்திற்குத் தேவையான உலர் உணவுப் பொருட்கள் யாழ். மாவட்டத்தில் உள்ள சகல அகதி முகாம்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

இம்முதற் கட்டத்தில் வழங்கப்பட்ட உணவுப் பொருள் சகல குடும்பங்களுக்கும் போதியளவு கிடைத்துள்ளதா என்பது பற்றியவிபரங்களை அகதி முகாம்களில்இருந்து சேகரித்த பின்னரே இரண்டாம் கட்ட ஒரு வாரத்திற்குத் தேவையான உலர் உணவுப் பொருள் வழங்கப்படும் என்றும், முதல் வாரத்திற்கு வழங்கப்பட்டதிலும் பார்க்க இரண்டாம் வாரத்திற்குக் கூடுதலாகவழங்கப்படும்என்றும்கூறினார். (ம)

# ஐஸ்கட்டி தொழிற்சாலை உடைக்கப்பட்டு திருட்டு

(விசேட நிருபர்)

யாழ். முதலாம் குறுக்கு வீதியிலுள்ள வட மாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜ பனிக்கட்டித்தொழிற்சாலை நேற்று முன் தினம் (5-7.90) பகல் உடைக்கப்பட்டுத் திருட்டு நடத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

யாழ். கோட்டையை அண்மித்த பகுதியில் ஆலை இருப்பதால் கடந்த இருபது நாட்களுக்கு மேலாக மூடிக்கிடப்பதாகவும், அப்பகுதியில் இருந்து பொதுமக்கள் பெயர்ந்து சென்றுள்ள [illegible] மையைப் பயன்படுத்தி [illegible] டர்கள் பல கொள்ளைகளை நடத்தி வருவதாகவும் சமாச தலைவர் டாக்டர் ஏ. எல். ஏபிரகாம் கவலை தெரிவித்தார்.

ஆலையில் இருந்து இருபதாயிரம் ரூபா பெறுமதியான யந்திர சாதனங்களும், சிறிய ஜெனரேட்டர் ஒன்றும் மேலும் சில பொருட்களும் திருடப் பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (12)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 07 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இலங்கைத் தமிழர் படுகொலை

# முதல்வர் கருணாநிதி மீது வாழப்பாடி கண்டனம்

(சென்னை)

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் இன அழிப்பு குறித்த விடயத்தில் இந்திய மத்திய அரசு எந்தவிதமான ஆக்கபூர்வ நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு, வாழப்பாடி இராமமூர்த்தி கண்டனம் தெரிவித்துள்ளார்.

பேரூரில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி இலங்கைத் தமிழர் விடயத்தில் மத்திய, மாநில அரசுகள் சார்பாக சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார். ஆனால் இதுவரை எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை என்று திரு. வாழப்பாடி குற்றம்சாட்டினார்.

முதல்வர் திரு. கருணாநிதி இலங்கை விடயத்தில் இன்னும் ஏன் மௌனியாக இருக்க வேண்டும் என்றும், கண்டி மன்னன் இராஜசிங்கனுக்கு முத்து மண்டபம் அமைத்து முடிப்பதோடு தனது கடமை முடிந்துவிட்டதாக கருணாநிதி கருதுகின்றாரா? என்றும் கேட்டார்.

இலங்கையில் நிகழும் பிரச்சினைகளை இந்தியா புறக்கணித்துவிட முடியாது என்றும் கூறியதுடன், இலங்கை தமிழ் மக்களை படுகொலைகளிலிருந்து காப்பாற்றும் வகையில் இலங்கை அரசு யுத்த நிறுத்தம் மேற்கொள்வதற்கு இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## இறந்த

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 13ந்திகதி புதன் கிழமை தொடக்கம் அனேக மக்கள் காயமடைந்துள்ள போதும் இவர்களில் பலர் தனியார் மருத்துவ மனைகளிலும் கிராமப்புற மத்திய மருந்தகம் வைத்திய சாலைகளிலும் சிகிச்சை பெற்று வீடுகளுக்குத் திரும்பியுள்ளதால் அவர்களது சரியான விபரங்கள் பெறமுடியாதுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய சூழ்நிலை காரணமாக அனேக சடலங்கள் இறப்பு பதிவுகள் விபரம் ஏதுமின்றி பிரேத அடக்கம் செய்யப்பட்டுள்ளதனாலும், இறந்தவர்களைஅடையாளம்கண்டு கொள்ள முடியாததாலும், இறந்தவர்களின் சரியான விபரங்களைப் யெற முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## பதுங்கு குழிக்குள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

றது. அன்றையதினம் இதே போன்று கொக்குவில் கிழக்கு சபாபதி லேன்வீடொன்றில் ஒரு மூடை சீனியும் மீட்கப்பட்டதாக அறியப்படுகிறது.

வடிசாராய விற்பனையைத் தடுக்க முனைந்த வேட்டையிலே சீனி மூடைகள் மீட்கப்பட்டிருப்பதால் வடிசாராய உற்பத்திக்காக மேலும் பல சீனி மூடைகள் பதுக்கி வைக்கப்பட்டிருக்கலாமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வேட்டையின் போது ஷாலி மோட்டார் சைக்கிள் ஒன்றும் பெருந்தொகையான வடிசாராயமும் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்பட்டது. (21)

## அகதி முகாம்களு-----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குள் இருக்கும் அகதி முகாம்களுக்கும், கோய்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள முகாம்களுக்கும் சிறுவர் பராமரிப்பு நிதியம், கியூடேக், அகதிகள் புனர்வாழ்வு நிதியம் 1983 ஆகியன உதவிகளை வழங்க இருக்கின்றன. (75)

## மாகாணசபை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள். இதனைத் தொடர்ந்து வடக்கு கிழக்கு மாகாணசபையின் இயக்கத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்த்து வைப்பதற்கான இச் சட்ட மூலங்கள் கொண்டுவரப்பட்டதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

## குடியிருப்பு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கப்பட்டது. இதனால் ஆரயம்பதியைச் சேர்ந்த சந்திரகுமார், கஜேந்திரலிங்கம், சிவகுமார், சிவசம்பு ஜெயக்குமார், உதயகுமார் குகதாசன் செல்வராணி, ஆகியோரும் தாளம்குளத்தைச் சேர்ந்த கனகரட்னம், மகாலிங்கம், ரவிச்சந்திரன், கணபதிப்பிள்ளை ஆகியோரும் காயமடைந்து மருத்துவ சிகிச்சை பெற்றுவருகின்றனர். (லோ)

## ஐக்கிய இலங்கையை . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கை எடுத்து வருவதாக அமைச்சர் ஹமீத் தெரிவித்தார்.

இச்சட்டமூலம் அதிகாரபரவலாக்கலை பாதிக்கும் என்று வாசுதேவ நாணயக்கார எம்.பி கூறினார்.

ஷெல் குண்டு தாக்குதலுடன் தெரிவிக்கின்றன.

# ஒரு அதிகாரியும் 15சிப்பாய்களும் பலி

திருக்கோணமலை மாவட்டத்தில் நூறாவது மைலில் கண்ணிவெடியில் சிக்கிய சிறிலங்கா இராணுவ அதிகாரி ஒருவரும் பதினைந்து சிப்பாய்களும் கொல்லப்பட்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் கல்முனையில் கண்ணிவெடியில் சிக்கிய சிறிலங்கா சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார், மற்றும் ஒன்பது பேர் காயமடைந்தனர். (லோ)

## யாழ்நகரைநோக்கி

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குதல்கள் மீண்டும் நேற்று அதிகாலை தொடக்கம் யாழ். நகரை நோக்கி நடத்தப்பட்டன.

நள்ளிரவு 12 மணிக்கும், அதிகாலை 1.45 மணிக்கும் பலாலி முகாமில் இருந்து ஏவப்பட்ட பத்துக்கும் மேற்பட்ட ஷெல்கள் யாழ்நகரப் பகுதியில் வீழ்ந்து வெடித்தன.

இதேவேளை நேற்று வெள்ளிக்கிழமை காலை யாழ். கோட்டை முகாமில் இருந்தும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. (21

## சிங் அரசுமீது-----

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனவும் தெரிவித்தார்.

இலங்கைக்கு இந்தியப்படைகள் அனுப்பவேண்டுமா எனக் கேட்டதற்குஅது தற்போதைய மத்திய அரசின் விடயமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பரிசோதித்து

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

யங்களைக் கேட்டுள்ளார். இரத்ததானம் மற்றவர்களுக்குத் தேவைப்படும் போது இரத்ததானம் இலகுவில் செய்யவும், இரத்தம் பரிசோதித்து பட்டியலில் பெயர் உள்ளவருக்கு இரத்தம் கொடுக்கவும் இம்முறை வழிவகுக்குமாம்.

## இலங்கை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

க்கிறார்கள் பன்னிரண்டுமைல்களுக்கப்பால் இருந்து காயங்களுடன் வரும் அனைவருக்கும் மனிதாபிமான ரீதியில் சிகிச்சை அளிக்கப்படும். இதனை கட்சிகள் அரசியலாக்காமல் மனிதாபிமான ரீதியில் அணுக வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

## மாணவிகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். இதன் முதற்கட்டமாக பொதுமக்கள் அதிகம் கூடும் பகுதியான உரும்பிராய் சந்தியில் மாவீரன் சிவகுமாரன் நினைவு தூபிக்கு முன்பாக பெரிய அளவிலான பதுங்கு குழி ஒன்றை நேற்று அமைத்தார்கள் இவர்களின் இம் முயற்சியின் போது வீதியால் சென்று கொண்டிருந்தவர்களும் பங்காளிகளாக மாறியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

## தமிழ்பேசும் மக்களை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வன்முறைக்குள்ளாக்கப்படுகின்றனர். தமிழீழப் பகுதிகள் முழுவதிலும், மக்கள் வாழும் பகுதிகள் மீதும் பாடசாலைகள், ஆலயங்கள் மீதும் விமானக்குண்டு வீச்சுக்களும், கடற்படைக் கப்பல்களிலிருந்து பீரங்கித் தாக்குதல்களும் இராணுவ முகாம்களிலிருந்து ஷெல் தாக்குதல்களும் நடாத்தப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

வட - கிழக்கு பகுதி மீது பொருளாதாரத் தடையை விதித்து தமிழ்பேசும் மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்குமாறு திட்டமிட்டு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இவைகளெல்லாம் ஸ்ரீலங்கா அரசினால் திட்டமிட்டுநடாத்தப்படும் தமிழின அழிப்பு நடவடிக்கைகள்என்பதேபல்கலைக்கழகமாணவர்களாகிய எமது நிலைப்பாடாகும்.

ஸ்ரீலங்காஅரசின் இத்தகைய இனவெறிச்செயல்களைப் பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அத்துடன் ஸ்ரீலங்கா அரசினால் திட்டமிட்டுத் தடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான உணவு, மருத்துவ, எரிபொருள் போன்ற அத்தியாவசியப் பொருட்களை நேரடியாகவே கொண்டு வந்து வட-கிழக்கில் விநியோகிக்குமாறு உதவி வழங்கும் சர்வதேச நிறுவனங்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் மட்டக்களப்பிலிருந்து 14ஆம் திகதி யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த 50 பல்கலைக்கழக மாணவர்கள் இடைநடுவில் ஸ்ரீலங்காபடையினரால் கைது செய்யப் பட்டுள்ளனர் என நாம் அறிகின்றோம்.

இவர்களுக்கு என்ன நேர்ந்துள்ளது என்பது பற்றி நாம் கவலை கொண்டுள்ளோம். இவர்கள் பாதுகாப்பாக எம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனக்கோருகின்றோம்.

இவ்விதமாக தமிழ் பேசும் மக்கள்மீது ஸ்ரீலங்கா அரசு கட்டவிழ்த்து விட்டிருக்கும் காட்டுமிராண்டித் தனமான அடக்குமுறைகளை நிறுத்து முகமாக ஸ்ரீலங்கா அரசிற்கு நெருக்கடியைக் கொடுக்க வேண்டுமென்று சர்வதேச சமூகத்தைப் பல்கலைக்கழக மாணவராகிய நாம் கோரி நிற்கின்றோம்.

இவ்விதம் யாழ். பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகின்றது. இக்கிராமம் திருக்கோணமலை நகரில் இருந்து பதினாறு மைல் தொலைவில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கிராமத்தில் கடந்தகாலங்களில் பொருளாதாரரீதியில் தமிழ் மக்கள் பெரிதும் நசுக்கப்பட்டுவந்தனர். குறிப்பாக பெரும்முதல் இட்டு வியாபாரம் செய்துவந்த தமிழ் முஸ்லிம் முதலாளிகளின் சொத்துக்கள் எரிக்கப்பட்டதுடன் அவர்களிடம் இருந்து ஏராளமான தொகைபணத்தையும் கொள்ளையிட்டுள்ளனர்.

## வவுனியா அரச

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் அத்தியாவசிய சேவைகளான சுகாதாரத் திணைக்களம், மின்சாரசபை கூட்டுறவுத் திணைக்களம், மக்கள் வங்கி, இலங்கை வங்கி நீர் விநியோகம் தொலைத் தொடர்பு ஊழியர்களையும் எதிர்வரும் திங்களன்று வேலைக்குத் திரும்புமாறு வவுனியா அரசாங்க அதிபர் பணித்துள்ளார். ஆனால் ஊழியர் வவுனியாவுக்குத் திரும்பலாமா என்ற சாத்தியக் கூறுகளைக் கண்டறிய ஞாயிறன்று அரசாங்க அதிபர் தலைமையிலான ஒரு குழு வாகனமொன்றில் நொச்சிமோட்டை வரை போக இருக்கிறது. அங்கிருந்து நிலமைகளைஆராய்ந்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்று வவுனியா அரசாங்க அதிபர் பத்மநாதன் ஈழநாதம் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

வவுனியாவில் செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவு வவுனியா தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு ஆகியன பாதுகாப்பான பிரதேசங்களாதலால், இப் பிரிவுகளைச் சேர்ந்த உதவி அரசாங்க அதிபர்களும், சமூக சேவை உத்தியோகத்தர் மூன்று பேரும் உடனடியாக தமது அலுவலகங்களுக்குச் செல்லும்படி பணிக்கப்பட்டுள்ளார்கள்.

ஆஸ்பத்திரி வைத்திய சேவை அதிகாரிகள் நெடுங்கேணியை மையமாகக் கொண்டு அங்கிருந்து திருக்கோணமலையிலிருந்து வரும் அகதிகளுக்கும், மற்றவர்களுக்கும் வைத்திய சேவையாற்றும்படி கேட்க்கப்பட்டுள்ளார்கள். இது இப்படியிருக்க, வவுனியா மருந்துக் களஞ்சியத்தில் இரண்டு மாதங்களுக்குப் போதிய மருந்து வகைகள் கையிருப்பில் இருப்பதாகவும், அம்மருந்து வகைகள் எடுப்பதற்கு வழிவகைகள் மேற்கொள்ளப்படும் என்றும் திரு. பத்மநாதன் தெரிவித்தார்.